Rogistered as a News Paper in Sri Lanka   பக்கங்கள்: 04   விலை ரூபா: 4 00

# ஈழநாதம்

THE EELANAATHAM   மக்கள் தினசரி   PEOPLES DAILY

நாதம்: 01   மாசி   (04 - 02 - 1991)   திங்கட்கிழமை   ஓசை: 351

## சிறிலங்கா தேசியக் கொடி வாங்கிச்செல்ல வற்புறுத்து

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதி செல்வோர் சிறிலங்கா வின் தேசியக் கொடியை வாங்கிச் செல்ல வேண்டும் என்று இராணுவத்தினரால் மிரட்டப்படுகின்றனர். சிறிலங்காவின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இக் கொடியை வாங்கிச் செல்லவேண்டும் என்று இராணுவத்தினரால் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். வவுனியா யாழ் வீதி இராணுவ சோதனை முகாமைத் தாண்டிச் செல்வோர்கள் இரா (4 ஆம் பக்கம் பார்க்க)

### வவுனியா - பறநட்டகல் சந்தியில்

# ஹெலி எரிகுண்டுத் தாக்குதல்

# மூன்று மினிபஸ்கள் நாசம்!

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பறநட்டகல் சந்தியில் தரித்து நின்ற மூன்று மினிபஸ்கள் மீது சிறிலங்கா விமானப்படை ஹெலிகொப்டர்கள் எரிகுண்டுத் தாக்குதலை நடத்தியதில் மூன்று மினிபஸ்களும் முற்றாக எரிந்து நாசமாகின. அத்துடன் மினிபஸ்ஸில் இருந்த 22,000 ரூபா பணமும், வேறு பொருள்களும் எரிந்து போயின. நேற்றுக்காலை ஏழுமணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

ஹெலிகொப்டர்கள் சுமார் ஒருமணிநேரம் இந்தத் தாக்குதலை நடத்தின.

நொச்சிமோட்டைக்கும், ஓமந்தைக்கும் இடையில் உள்ள குறிப்பிட்ட இந்தச் சந்தியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மினிபஸ்களே எரிந்து சாம்பராயின.

உடுப்பிட்டியைச் சேர்ந்த கதிரவேலு சர்வேஸ்வரன் என்பவரது (30ஸ்ரீ6822) மினிபஸ்ஸும், கொக்குவிலைச் சேர்ந்த நடராஜா யோகரட்ணம் என்பவரது (30ஸ்ரீ1750) மினிபஸ்ஸும், நீர்வேலியைச் சேர்ந்த காசிநாதர் குலசிங்கம் என்பவரது (29ஸ்ரீ6925) மினிபஸ்ஸுமே மேற்படி தாக்குதலுக்குஉள்ளாகி அழிந்தன.

குறிப்பிட்ட மினிபஸ்களுக்குள் வைக்கப்பட்டிருந்த பணமும், ஏனையபொருள்களும், தீப்பிடித்து எரிந்து அழிந்தன.

இந்த மினிபஸ்களின் சாரதிகளும், நடத்துனர்களும் தாக்குதல் சமயத்தில் ஓடி பாதுகாப்பான இடத்தில் தங்கிக்கொண்டதனால் காயம் மற்றும் உயிரிழப்புகளிலிருந்து தப்பிக்கொண்டனர்.

இந்தத் தாக்குதலில் மேலும் சிலவாகனங்களுக்குசிறிய சேதங்கள் ஏற்பட்டன. அருகில் உள்ள வீடொன்றும் சிறிது சேதமடைந்தது.

அரசபடையினரின் இந்த வான் தாக்குதலை அடுத்து பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து வேறிடங்களுக்கு ஓடிச் சென்றதை காண கூடியதாக இருந்தது. நொச்சிமோட்டை,

## பாடசாலைமீதான குண்டு வீச்சு; உயர் அதிகாரிகளுக்குக் கவலை

(யாழ்ப்பாணம்)

மீது குண்டு வீசப்பட்டதால்

### தாளையடியில் குண்டுவீச்சு

## அரச மருந்தகம் சேதம் மூன்று பொதுமக்கள் காயம்

(நல்லூர்)

தாளையடியில் சிறிலங்கா விமானங்கள் குண்டுவீச்சு நடாத்தியுள்ளன. நேற்றுக்காலை பத்து மணியளவில் தாளையடியில் இடம்பெற்ற குண்டு வீச்சுத் தாக்குதலில் அரசினர் மருந்தகம், ஊழியர் விடுதி, உபஅரசாங்க அதிபர் அலுவலகம் என்பன பலத்த சேதம் அடைந்துள்ளன. இந்தத் தாக்குதலில் செல்லத்துரை ருந்தவராசா (24 வயது) உடுத்துறை, இராமலிங்கம் சந்திதாஸ் (39 வயது) திருமலை, ச. பொன்னையா (45 வயது) ஆழியவளை உட்பட நால்வர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(85)

## சினைப்பர் தாக்குதலுக்கு இரு இராணுவம் பலி

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சினைப்பர்த் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் பலியாகியுள்ளனர்.

நேற்றுக் காலை பகல் பதினொரு மணியளவில் விடுதலைப் புலிகளால் மாவிட்டபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட சினைப்பர்த் தாக்குதலாலேயே இராணுவத்தினர் இருவர் பலியாகியுள்ளனர் (மு

## மரண தண்டனை

(யாழ்ப்பாணம்)

பணமோசடியிலும், பாலியல் உறவுகளிலும் ஈடுபட்டவருக்கு உருத்திரபுரத்தில் வைத்து பகிரங்க மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்துகொண்டு பணமோசடியிலும், பாலியல் உறவுகளிலும் ஈடுபட்ட செல்வா என்பவருக்கே கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப்புலிகளால் மரணதண்டனை வழங்கப்பட்டது.

இவருடன் சேர்ந்து பணமோசடியில் ஈடுபட்ட உருத்திரபுரத்தைச் சேர்ந்த இ. தெய்வேந்திரன் என்பவரையும் விடுதலைப்புலிகள் பொதுமக்கள் முன் அம்பலப்படுத்தியபின் விடுதலை செய்துள்ளார்கள். (மு)

## தோட்டத்தினுள் ஷெல் வீச்சு

பலாலி இராணுவமுகாமிலிருந்து நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் வீசப்பட்ட ஷெல் அச்சுவேலிப் பகுதியில் உள்ள வெங்காயத் தோட்டமொன்றில் விழுந்து வெடித்துள்ளது. (85)

வவுனியா மாவட்டத்தில் பறநட்டகல் சந்தியில் தரித்து நின்ற மூன்று மினிபஸ்கள் மீது சிறிலங்கா விமானப்படை ஹெலிகொப்டர்கள் எரிகுண்டுத் தாக்குதலை நடத்தியதில் மூன்று மினிபஸ்களும் முற்றாக எரிந்து நாசமாகின. அத்துடன் மினிபஸ்ஸில் இருந்த 22,000 ரூபாய் பணமும், வேறு பொருள்களும் எரிந்து போயின. நேற்றுக்காலை ஏழு மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

ஹெலிகொப்டர்கள் சுமார் ஒருமணிநேரம் இந்தத் தாக்குதலை நடத்தின.

கொச்சிமோட்டைக்கும், ஓமந்தைக்கும் இடையில் உள்ள குறிப்பிட்ட இந்தச் சந்தியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மினிபஸ்களே எரிந்து சாம்பராயின.

உடுப்பிட்டியைச் சேர்ந்த கதிரவேலு சர்வேஸ்வரன் என்பவரது (30ஸ்ரீ6822) மினிபஸ்ஸும், கொக்குவிலைச் சேர்ந்த நடராஜா யோகராசா என்பவரது (30ஸ்ரீ1750) மினிபஸ்ஸும், நீர்வேலியைச் சேர்ந்த காசிநாதர் குலசிங்கம் என்பவரது (29ஸ்ரீ6925) மினிபஸ்ஸுமே மேற்படி தாக்குதலுக்குஉள்ளாகி அழிந்தன.

குறிப்பிட்ட மினிபஸ்களுக்குள் வைக்கப்பட்டிருந்த பணமும், ஏனையபொருள்களும், தீப்பிடித்து எரிந்து அழிந்தன.

இந்த மினிபஸ்களின் சாரதிகளும், நடத்துனர்களும் தாக்குதல் சமயத்தில் ஓடி பாதுகாப்பான இடத்தில் தங்கிக்கொண்டதனால் காயம் மற்றும் உயிரிழப்புகளிலிருந்து தப்பிக்கொண்டனர்.

இந்தத்தாக்குதலில் மேலும் சிலவாகனங்களுக்குசிறிய சேதங்கள் ஏற்பட்டன. அருகில் உள்ள வீடொன்றும் சிறிது சேதமடைந்தது.

அரசபடையினரின் இந்த வான் தாக்குதலை அடுத்து பல குடும்பங்கள் இடம்பெயர்ந்து வேறிடங்களுக்கு ஓடிச்சென்றதை காண கூடியதாக இருந்தது. நொச்சிமோட்டை, பேயாடி, கூழாங்குளம், ஓமந்தை பகுதிகளில் தொடர்ந்து பீதி நிலவுவதை அவதானிக்க முடிந்தது. (தி)

# பாடசாலைமீதான குண்டு வீச்சு; உயர் அதிகாரிகளுக்குக் கவலை

(யாழ்ப்பாணம்)

விமானக் குண்டு வீச்சால் ஒரு கல்விக்கூடம் முற்று முழுதாக சேதமடைந்து போனதையிட்டு யாழ். கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் தமது கவலையை தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் கொக்குவில்சிறிஇராமகிருஷ்ணசாரதா மகளிர்மகாவித்தியாலயத்தின் மீது குண்டு வீசப்பட்டதால் அந்தமகாவித்தியாலயம் தரைமட்டமாகப் போயுள்ளதுடன் தளபாடங்களும் முற்றாக அழிந்து போனதையிட்டு அங்கு கல்விபயின்று வந்த மாணவிகளை வேறு ஒரு பாடசாலைக்குஉடனடியாகமாற்றி வைப்பது பற்றி ஆலோசிக்க உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (லோ)

# இளம் பெண் தாக்கப்பட்டார்

(நல்லூர்)

வீட்டிலிருந்த இளம் பெண்ணொருவர் பலமாகத் தாக்கப்பட்டதனால் காயமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் பற்றி தெரிய வருவதாவது: குருநகர் கடற்கரை வீதியில் இருந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தினர் குடும்பத்திற்கும் ஜனசக்தி உதவி தொடரும்

(கொழும்பு)

ஜனசக்தி உதவி பெறுபவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் ஒருவர்தன்னும் பாதுகாப்புப்படை மற்றும் பொலிஸ் திணைக்களத்தில் நிரந்தர நியமனம் பெற்றால் ஜனசக்தி உதவித்தொகை இடைநிறுத்தப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் அவர்கள் வங்கி அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் நிரந்தர நியமனம் பெற்றால் ஜனசக்தி உதவி நிறுத்தப்படுமாம்.

இதற்கான தீர்மானத்தை உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சர் எடுத்துள்ளார் என்றும் கூறப்பட்டது.

# வீட்டிற்கு வராவிட்டால் வீடுகள் தகர்க்கப்படும்

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து சென்றகுடும்பங்கள் மீண்டும் தத்தமது வீடுகளில் குடி அமர வேண்டும் என்றும்வீட்டு உரிமையாளர்கள் குடியிருக்காத வீடுகள் தகர்த்தெறியப்படும் என்றும் பூந்தோட்டம் இராணுவத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூந்தோட்டம் பகுதியில்ஏற்கனவே பல வீடுகள்சிறிலங்கா இராணுவத்தினரால் தகர்த்து எறியப்பட்டும், தீ வைக்கப்பட்டும் உள்ளன.

தவிர, வவுனியா நகரப் பகுதியில் உள்ள பல கடைகள் மூடப்பட்டுஇருப்பதைக்குறித்து அவை இயங்க வைக்கப்பட வேண்டும். அல்லாவிடில் முஸ்லிம்களுக்கு வழங்கிவிடுவோம் என இராணுவத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா இழமைச் சந்தையில் உள்ள பல கடைகள் கடந்த ஜூன் மாதத்தின் பின்னர் மூடப்பட்டு இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (தி)

# பெண்ணின் தற்கொலைக்கு காரணமானவர் கைது

(வவுனியா)

அண்மையில் குளைத்திலிருந்து வந்தவரான ராணி என அழைக்கப்படும் இளம் பெண்ணின் தற்கொலைக்கு காரணமானவர் என்று கருதப்படும் வாலிபர் ஒருவர் விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட பெண்ணிடம் பலாத்காரம் புரிந்து அவரின் தற்கொலைக்கு காரணமாகியுள்ளார் என்ற சந்தேகத்தின் பேரில் சந்தனம் அசோகன் (29) என்பவரை தாம் கைது செய்திருப்பதாக விடுதலைப் புலிகளினால் தெரிவிக்கப்பட்டது.

சாளம்பைக் குளத்தைச் சேர்ந்த இந்த வாலிபர் தற்போது விடுதலைப்புலிகளின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (தி)

தாளையடியில் குண்டுவீச்சு

# அரச மருந்தகம் சேதம் மூன்று பொதுமக்கள் காயம்

(நல்லூர்)

தாளையடியில் சிறிலங்கா விமானங்கள் குண்டுவீச்சு நடாத்தியுள்ளன. நேற்றுக்காலை பத்து மணியளவில் தாளையடியில் இடம்பெற்ற குண்டு வீச்சுத் தாக்குதலில் அரசினர் மருந்தகம், ஊழியர் விடுதி, உபஅரசாங்க அதிபர் அலுவலகம் என்பன பலத்த சேதம் அடைந்துள்ளன. இந்தத் தாக்குதலில் செல்லத்துரை சுருந்தவராசா (24 வயது) உடுத்துறை, இராமலிங்கம் சாந்திதாஸ் (39 வயது) திருமலை, ச. பொன்னையா (45 வயது) ஆழியவளை உட்பட நால்வர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (85)

ளார்கள். (மு)

# தோட்டத்தினுள் ஷெல் வீச்சு

பலாலி இராணுவமுகாமிலிருந்து நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் வீசப்பட்ட ஷெல் அச்சுவேலிப் பகுதியில் உள்ள வெங்காயத் தோட்டமொன்றில் விழுந்து வெடித்துள்ளது. (85)

# சினைப்பர் தாக்குதலுக்கு இரு இராணுவம் பலி

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சினைப்பர்த் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் பலியாகியுள்ளனர்.

நேற்றுக் காலை பகல் பதினொரு மணியளவில் விடுதலைப் புலிகளால் மாவிட்டபுரத்தில் மேற்கொள்ளப்பட்ட சினைப்பர்த் தாக்குதலாலேயே இராணுவத்தினர் இருவர் பலியாகியுள்ளனர் (மு)

# கொழும்புப் பயணிகள் கடைத் தாழ்வாரங்களில்

கொழும்பு செல்லும் பயணிகள் மேற்கொண்டு பயண அனுமதி இடைக்காததால்மரநிழல்களிலும், பாடசாலைகள், கடைத் தாழ்வாரங்களில்படுத்துறங்கி வருவதாக நேற்று அங்கிருந்து வந்து சேர்ந்த பயணிகள் தெரிவித்தனர். இராணுவம்தொடர்ந்துபயண அனுமதி தராததால் ஆயிரக்கணக்கான எங்களுடன் வந்தபயணிகள் வீதியோரங்களில் உள்ள மாநிழல்களில் குழந்தை குஞ்சுகளுடன் தவங்கிடக்கின்றனர் எம்மால் மரநிழல்களில் படுத்துறங்க முடியாது. திரும்பிவிட்டோம் என்றனர். (லோ)

# ஹெலி தாக்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரப்பகுதியில் இருந்து 158 ஆம் கட்டைவரையுள்ள பகுதியில் நேற்றுக் காலை 6-45 மணியளவில் ஹெலியில் இருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதேதினம் உமையாள்புரத்திலும் ஹெலியில் இருந்து துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. (மு)

வெகுமதியும், பதவி உயர்வும் தருவதான

# வாக்குறுதியை நிறைவேற்ற அரசாங்கம் தவறிவிட்டது

(கொழும்பு)

யாழ். டச்சுக்கோட்டையில் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டிருந்த இராணுவத்தினருக்கு இதுவரை பதவி உயர்வு எதுவும் வழங்கப்படவில்லையாம். இவர்களுக்குப் பதவி உயர்வும், வெகுமதியும் வழங்குவதென அரசாங்கம் உறுதிமொழி அளித்திருந்தது. ஆனால், அரசாங்கம் தன் பேச்சைக் காப்பாற்றத் தவறிவிட்டது என்று கோட்டை முகாமிலிருந்த இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜூன் 11 ஆம் திகதி முதல் தாம் கோட்டையிலிருந்து மீட்கப்பட்டது வரை சுமார் 200 இராணுவத்தினர் வரை புலிகளின் ஷெல் தாக்குதலால் இறந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு செப்டம்பர் 22 ஆம் திகதி பலாலி முகாமிலிருந்து விமான மார்க்கமாகத் தம்மைக் கொண்டு செல்லப்பட முதல், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சனும், இராணுவ உயர் அதிகாரிகளும் பொலிசாருக்கும், தமக்கும் வெகுமதி, பதவி உயர்வு ஆகியன வழங்குவதாகச் சொல்லியிருந்தார்கள் என்று அந்த அதிகாரிதெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் முற்றுகை ஆரம்பித்த சமயம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நச்சுத் தன்மையை அறிய கோழிகள் பயன்பாடு

(அங்காரா)

ஈராக்கின் இரசாயன ஆயுதங்களின் நச்சுவாயு பற்றி அறிவதற்காக துருக்கியில் கோழிகளை உபயோகித்து வருகிறார்கள்.

ஈராக்கின் இரசாயன தாக்குதலுக்கு அஞ்சிவரும் துருக்கி மக்கள் இரவில் வீட்டிற்கு வெளியே கோழி ஒன்றைக் கட்டிவைத்து காலையில் அது உயிருடன் இருந்தால் இரசாயனப் பாதிப்பில்லையென அவர்கள் கணித்துக் கொள்கிறார்கள்.

நச்சு வாயுவிற்கு எதிரான அறையில் ஒரு குடும்பம் வசிப்பதன் மூலமே கோழிகளைக் கொண்ட எச்சரிக்கை முறை பலன் அளிக்குமென்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

4 பரப்பு காணி வீட்டுடன் அச்சுவேலி தெற்கில் மகிழடி வயிரவர் முன்பாக. சற்குருநாதன் 2, திருவள்ளுவர் சாலை கந்தர்மடம் யாழ்ப்பாணம். தொடர்பு கொள்க. (R / 1077)

### கல்வி

G.C.E(O L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை புதிய பழைய திட்டத்திற்கமைய 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஒன்றிலிருந்து ஒரு மாதத்திற்குள் தொடர் வகுப்புக்கள் மூலம் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும் மற்றும் புலமைப்பரிசிலுக்குரிய பாடங்களும் பாலர் வகுப்பிலிருந்து A/L வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, ஸோகேந்திரா வீதி சுண்டுக்குளி. (R/1054)

### The Jaffna Education Center

யாழ்ப்பாணக் கல்வி நிலையம். (சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்) O/L, A/L, I A B, Spoken English, Short hand Typing. இருமொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியுமுண்டு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களினால் பயிற்றப்படும். (B/1965)

### பெற்றுக்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மகேந்திரா வீதியிலுள்ள மக்கள் கடையில் நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தைச் சேர்ந்த இரு (கூப்பன்) உணவு முத்திரைகள் தவறவிடப்பட்டுள்ளன. உரியவர்கள் பெற்றுக்கொள்ளவும்.

### நிவாரண வேலைகள்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் நிவாரண வேலைகளை ஒழுங்குசெய்துள்ளது.

இந்த மக்களுக்குத் தேவையான உடனடி உணவுவிநியோகம், இருப்பிட வசதிபோன்றவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. (க)

### தரப்படுத்தும் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழகத்தின் உயர் தொழில் ஆங்கிலக்கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான தரப்படுத்தும் பரீட்சை எதிர்வரும் 10ஆம் திகதி காலை 10 00 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும். மேற்படி பரீட்சையின் கடந்த கால வினாத்தாள்களை இந்நிலையத்தில் பார்வையிடலாம். (20)

---

உ

ஸ்ரீராம ஜயம்

யாழ்/வடமராட்சி

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்

# மஹோற்சவம்

(1990 புரட்டாதியில் பின் போடப்பட்டது)

| | |
|---|---|
| கொடியேற்றம்: | 13-2-91 புதன்காலை 11-00 |
| தேர்: | 27-2-91 புதன் காலை 8-00 |
| சமுத்திர தீர்த்தம்: | 28-2-91 வியாழன் மாலை 4-00 |
| கேணித் தீர்த்தம்: | 1-3-91 வெள்ளி காலை 11-00 |

பிரதேசக் கால நிலைக்கேற்ப நேரங்களில் மாற்றம் ஏற்படலாம்.

❋ ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான உற்சவங்களுக்கோ திருப்பணிகளுக்கோ நிதி, பொருட்கள் ஆகியவை சேகரிக்க வெளியார் எவரும் நியமிக்கப்படவில்லை. அன்பளிப்புகள் யாவும் கோயில் களஞ்சியத்தில் செலுத்தப்பட்டு பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்வது அவசியம்.

---

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

91 O/L Dec. ஆண்டு 10, 9, 8, 7, 6

மாசி 6 இல் ஆரம்பம் காலை 8-00 மணி

மு. குறிப்பு: புதிய அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

(B/ 1974)

---

## 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



தமிழ்த்தாய் மலர்ந்திட 28 - 03 - 1972

தமிழீழத்தாய் விழித்திட 22 - 12 - 1990

கட்டுவன் மினிமுகாமிலிருந்து வெளியேறமுற்பட்ட இராணுவத்துடனான நேரடிமோதலில் நெஞ்சில் குண்டைஏந்தி வீரமரணமடைந்த வீரவேங்கை

---

## பயிற்சி பெறவந்தோர் திரும்பினர்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் நடாத்தப்படும் முதலுதவிப் பயிற்சி வகுப்புக்கு வந்திருந்த பல மாணவர்கள் அனுமதி கிடைக்காமையால் திரும்பிச் சென்றனர்.

வழமையிலும் பார்க்க தற்போது முதலுதவிப் பயிற்சியைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற உணர்வில் ஆண், பெண் இருபாலாரும் பெரும் ஆர்வத்தில் வந்திருந்தனர். செஞ்சிலுவைச் சங்கத்தினரின் மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி நடைமுறையிலும் தலைமைச் சான்றிதழ்கள் கோரப்பட்டதனாலும் அனுமதி கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர். (அ)

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி





கப்டன் **ஆஷா** நடராசா பத்மாவதி (கலா) ஜனனம்: 06-04-1968

வீரவேங்கை **ஸ்ராலின்** துரைரட்ணம் பகீரதன் ஜனனம்: 28-03 1972

வீரமரணம்: 22-12-1990

(கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நடந்த நேரடி மோதலில் வீரமரணமடைந்தனர்)

—அரியாலை மத்தி சிற்றூரவை

(B. 1973)

---

## நினைவு கூருகின்றோம்!

### பெப்ரவரி 4

1985ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

★ கந்தசாமி துரைநாயகம் (LB,3,மூதூர்)

1986ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

பரிசுத்தம் (க. ஆத்மராஜா - கல்முனை)

1988ஆம் ஆண்டு தேசத்துரோகிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட

★ வரதன் (சினித்தம்பி வரதராசன் - பாலத்தோப்பூர்)

சுண்டுக்குளி (R/1054)

## The Jaffna Education Center

யாழ்ப்பாணக் கல்வி நிலையம். (சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்) O/L, A/L, I A B, Spoken English, Short hand Typing. இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியுமுண்டு. தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களினால் பயிற்றப்படும். (B/1965)

## பரீட்சை

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழகத்தின் உயர் தொழில் ஆங்கிலக்கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான தரப்படுத்தும் பரீட்சை எதிர்வரும் 10ஆம் திகதி காலை 10 00 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும். மேற்படி பரீட்சையின் கடந்த கால வினாத்தாள்களை இந் நிலையத்தில் பார்வையிடலாம். (20)

---

உ

ஸ்ரீராம ஜயம்

யாழ்/வடமராட்சி

### ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்

# மஹோற்சவம்

(1990 புரட்டாதியில் பின் போடப்பட்டது)

கொடியேற்றம்: 13-2-91 புதன்காலை 11.00
தேர்: 27-2-91 புதன் காலை 8-00
சமுத்திர தீர்த்தம்: 28-2-91 வியாழன் மாலை 4-00
கேணித் தீர்த்தம்: 1-3-91 வெள்ளி காலை 11-00

பிரதேசக் கால நிலைக்கேற்ப நேரங்களில் மாற்றம் ஏற்படலாம்.

❋ ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான உற்சவங்களுக்கோ திருப்பணிகளுக்கோ நிதி, பொருட்கள் ஆகியவை சேகரிக்க வெளியார் எவரும் நியமிக்கப்படவில்லை. அன்பளிப்புகள் யாவும் கோயில் களஞ்சியத்தில் செலுத்தப்பட்டு பற்றுச் சீட்டுப் பெற்றுக்கொள்வது அவசியம்.

(R/ 1071) - தர்மகர்த்தா சபை.

---

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரி கலைமுதற் தேர்வு (G.A.Q)

1990 ஏப்ரல் பரீட்சைக்கு

யாழ்ப்பாண தேர்வு நிலையத்தில் தோற்றியோர் கவனத்திற்கு!


மேற்படி பரீட்சைக்கு தோற்றிய பரீட்சார்த்திகளின் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. பெறுபேறுகளை அறிய விரும்பும் பரீட்சார்த்திகள் தங்களது சுட்டிலக்கத்துடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும். தங்களுக்குரிய கலைமாணி (B.A) விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

உதவிப்பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B/1967)

---

## 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



தமிழ்த்தாய் மலர்ந்திட 28 - 03 - 1972

தமிழீழத்தாய் கலிர்ந்திட 22 - 12 - 1990

கட்டுவன் மினிமுகாமிலிருந்து வெளியேறமுற்பட்ட இராணுவத்துடனான நேரடிமோதலில் நெஞ்சில் குண்டையேந்தி வீரமரணமடைந்த வீரவேங்கை

### ஸ்ராலின்
### (துரைரட்ணம் பகிரதன்)

ஸ்ரான்லிக் கல்லூரியின் உயர்தர மாணவன்

அம்மாவின் செல்ல மகன் நீயடா!
தமிழ்த்தாயின் அரும்புதல்வன்தானடா!
அக்காமாரின் ஆசைத்தம்பி நீயடா!
அவர்தம் மானம் காத்திட்ட வீரமறவன்தானடா!
அண்ணாவின் இனிய தோழன் நீயடா!
அவனுக்கு நல்வழி காட்டிய ஆசான் நீயடா!
பகீர் பகீர் என அழைத்திட இனி யாரடா?
பரிதவிக்க விட்டு நீயும் சென்றாயோடா?
தமிழீழம்தான் உன் மூச்சென உரைத்தாயேடா!
உன்கனவும் நனவாகுமுன் போனாயேடா!
தம்பி நீயன்றோ எமக்கெல்லாம் ஆசைத்தம்பி!
அண்ணனாக எமக்கெல்லாம் வழிகாட்டி,
வீர சுவர்க்கம் தனைத்தேடி போனாயேடா!
என்று காண்போம் நாமும் உன்னை!
நீயன்றோ அன்பு மகன்!
நீயன்றோ ஆசைத் தம்பி!
நீயன்றோ மாவீரன்!

(இவருடன் வீரமரணமடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்)

170/2 கண்டிவீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
(R-1081)

உனது பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, அக்காமார்,
அண்ணா, மற்றும்
உற்றார், உறவினர்.

---

கப்டன்
## ஆஷா
நடராசா
பத்மாவதி
(கலா)
ஜனனம்: 06-04-1968

வீரவேங்கை
## ஸ்ராலின்
துரைரட்ணம்
பகிரதன்
ஜனனம்: 28-03 1972

வீரமரணம்: 22-12-1990

(கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நடந்த நேரடி மோதலில் வீரமரணமடைந்தனர்)

—அரியாலை மத்தி சிற்றூரவை
(B. 1973)

---

## நினைவு கூருகின்றோம்!

### பெப்ரவரி 4

1985ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த

★ கந்தசாமி துரைநாயகம் (LB,3,மூதூர்)

1986ஆம் ஆண்டு வீரமரணமடைந்த

பரிசுத்தம் (க. ஆத்மராஜா - கல்முனை)

1988ஆம் ஆண்டு தேசத்துரோகிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட

★ வரதன் (சினித்தம்பி வரதராசன் - பாலத்தோப்பூர்)

★ ஜோன்சன் (S. மாசிலாமணி - கிளிநொச்சி)

★ சுதர்சன் (N. சுபாருபன் - கிளிநொச்சி)

★ விக்டர் (V. தவநாயகம் - கிளிநொச்சி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

வானொலியும், தொலைக்காட்சியும்
இந்த மண்ணின் சுதந்திரம்
இன்று தான் கிடைத்ததென
எடுத்தோதும் வேளையிது;
சுதந்திரம் பெறுதற்கான
போராட்ட வேள்வியில்
நீராகிப் போனவர் நீங்கள்
உங்கள் நினைவுகள்
நீறுபூத்த நெருப்பாக
எங்களின் எண்ணத்தில்......

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டு வீரமரணத்தைத் தழுவியவர்களாவர்.

– விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-1919)

**★ சிந்தனைக்கு ★**

சுதந்திரமாய் இருக்க உறுதிகொண்ட மனிதன் மீது அடிமைத் தளையைப் பூட்டுவதை விட, நிலையான மலையை அடியோடு பெயர்த்து, அப்பால் எறிவது கூட எளிதானது

— ராபர்ட் ஸதே

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 04-02-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 65

# இலங்கையின் 'சுதந்திரமும்' வாளேந்திய சிங்கமும்

இன்று இலங்கையின் நாற்பத்தி மூன்றாவது "சுதந்திர நாள்". அதாவது இலங்கை மக்களும் மண்ணும் அரசியல், பொருளாதார, சமூக விடுதலை பெற்ற நாள் என குறிக்கப்படும் நாள். இந்த சுதந்திரம் 442 வருடங்களின் பின் (1506 - 1948) அந்நியரிடம் இருந்து கிடைக்கப் பெற்றது எனவும் குறிப்பிடப்படுகின்றது. அதே வேளை சுதந்திர தினத்தை கொண்டாடும் முகமாக சிறிலங்கா எங்கும் பெரியளவில் ஏற்பாடகியுள்ளது.

ஆனால், இலங்கையின் சுதந்திர கால வரலாறும் ஏனைய மூன்றாம் உலக நாடுகளின் வரலாறு போன்றதே. பேச்சளவில் கிடைக்கப் பெற்ற அரசியல் அதிகாரத்தின் மூலம் ஏனைய மூன்றாம் உலக நாடுகளைப் போன்றே இலங்கையும் இறைமையுள்ள தன்னாதிக்கம் உடைய நாடாக இருக்க முடியவில்லை. ஏனெனில் பொருளாதார சுதந்திரம் இன்னமும் இலங்கைக்குக் கிட்டவில்லை.

காலனி ஆதிக்கவாதிகளினால் விட்டுச் செல்லப்பட்ட பொருளாதார அமைப்பு முறை மாறவில்லை. அப் பொருளாதார அமைப்பு முறை இன்னமும் காலனி ஆதிக்கவாதிகளின் தேவை கருதியே செயற்படுகின்றது. அத்தோடு நவீன காலனியாதிக்க முறைகளும் சேர்ந்து கொண்டமையால் இலங்கையின் தன்னாதிக்கம், இறைமை என்பன பெருமளவில் அற்றுப் போய்விட்டன. அந்நிய நாடுகளினதும், நிறுவனங்களினதும் தேவைக்கேற்ப அரசாங்கம் செயற்பட வேண்டியுள்ளது.

இவை ஒருபுறமிருக்க ஐரோப்பியரால் பறிக்கப்பட்ட தமது உரிமைகளைப் பெற இன்னும் இலங்கையின் ஒரு பகுதி மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். ஐரோப்பியர் சிங்களவரிடம் தாரைவார்த்துச் சென்ற தமிழர் உரிமை பெறுவதற்காக தமிழர்கள் பல்லாயிரக் கணக்காக உயிர்த்தியாகம் செய்துவிட்டார்கள்.

தமது உரிமையைக் கேட்ட மக்கள் மீது இராணுவ அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. அத்தோடு உரிமைப் போராட்டத்தை அடக்குவதற்கு மனித உரிமைகளுக்கும், சுதந்திரத்திற்கும் விரோதமான சட்ட திட்டங்களும் ஆக்கப்பட்டுள்ளன.

ஆனால், சிறுபான்மையினரை அடக்குவதற்கு ஆக்கப்பட்ட சட்ட திட்டங்களினால் இன்று இலங்கை பூராகவும் உள்ள மக்களும் தமது மனித உரிமைகளைக் கூட இழந்து உள்ளனர்.

அவசரகாலச் சட்டம் வருடக்கணக்காக இலங்கையில் நடைமுறையில் உள்ளது. இதனால் சிங்கள மக்களும் தமது அடிப்படை ஜனநாயக உரிமைகளை இழந்துள்ளார்கள். பேச்சு, எழுத்து, கருத்துச் சுதந்திரம் என்பனவற்றோடு தமது அரசியல் அடிப்படை உரிமைகளையும், ஜனநாயக உரிமைகளையும் அவசரகாலச் சட்டத்தின் மூலம் மக்கள் இழந்துள்ளார்கள்.

# உடைந்த வீடுகளில் உடையாத உள்ளங்கள்

முன்பு வீடுகள் இருந்த காணிக்குள் உடைந்த கட்டடங்களுக்கு மேலாக நடந்து சென்றபோது சில காட்சிகளைக் காணமுடிந்தது. தப்பித் தவறி கட்டட இடிபாடுகளுக்குள் சிக்காமல் இருக்கும் பூமரங்களுக்கு தண்ணீர் ஊற்றப்பட்டிருந்தது. நாங்கள் செல்வதற்குமுன்னரே காணிச் சொந்தக்காரர்கள் வந்து ஊற்றி விட்டுப் போய்விட்டார்கள். இது வல்லை மக்களின் நம்பிக்கையையே எடுத்துக் காட்டியது. அவர்கள் விரக்தியடையவில்லை. விழ விழ எழுவோம் என்பதை உணர்த்துகின்றார்கள். நடந்து நடந்து போய் பொது மக்களை சந்தித்தபோது ஒவ்வொருவருடைய கருத்துக்களும் இவ்வாறாக இருந்தது.

**வல்லை அனந்தராஜ்**

வல்லைப்படுகொலைகள் நூலை எழுதியவர் இவர். இவர் கூறுகிறார்.

"இம்முறை இடம் பெற்ற விமானத்தாக்குதலில் 98 வீதமான மக்கள் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 95 வீதமான மக்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இத்தாக்குதலால் மக்களுடைய மோறல் உடைந்து போனதாகத் தெரியவில்லை. போராட வேண்டுமென்ற மோறல் தான் மேலோங்கியுள்ளது"

**பஞ்சவர்ணம்**

இவர் ஒரு கடற்றொழிலாளி நேவாம் குண்டுகளால் எரிக்கப்பட்ட குட்டிராசன் என்பவரது வாடியையும் அதற்குள் எரிந்து கிடந்த எஞ்சின் போன்றவற்றை காட்டி "தமிழீழமே எஞ்சுபோச்சு எங்களுக்கு ஒரு நாடு இல்லையெண்டால் தானே இந்த நிலை ஆனபடியால் கஷ்டப்பட்டேனும் நாங்கள் சுதந்திரம் பெறவேணும்"

**செல்லையா கந்தசாமி**

யாழ்ப்பாண வீரபத்தச் சேர்ந்தவர் 6வது தலைமுறையைக் கண்ட 92 வயதான இவர் வீட்டின் பெரும் பாகங்கள் இடித்து விழுந்த போதும் குசினியில் அடுப்புக்குக் கீழ் விறகு போடும் இடத்தில் பதுங்கியிருந்து தப்பியவர். இத்தாக்குதலால் செவிப்புலன்சற்றே பாதிக்கப்பட்டி

இருந்து கொண்டு இவர் கூறுகிறார் "போறதெல்லாம் போகட்டும் தம்பி நாங்கள் போராளிகளோட சேர்ந்து போராடுவோம்."

**புத்திரசிகாமணி சர்வதமன்னன்**

கடற்றொழில் செய்துவரும் 33 வயதான இவர் சொண்டைக்கட்டை என்னும் இடத்தில் Y-12 போட்ட ஒரு குண்டினால் சேதமடைந்த 11 வீடு

> பிரேமதாஸா தனது சவக்குழியை தானே தோண்டுகிறார். போராட்டமெண்டா நாங்கள் இதைவிட இன்னும் மோசமான இழப்புக்களைச் சந்திக்க தயாராக இருக்கவேணும்.
>
> - ஏ. புண்ணியமூர்த்தி

களைக் காட்டி "வீடுகள் தான் உடைந்திருக்கு மோறல் உடையேல்ல"

**சிவகாமிப்பிள்ளை**

விமானக்குண்டு வீச்சினால் தலையில் காயமடைந்த இவர் கூறுகிறார்: "நான் செத்தாலும் பறவாயில்லை, புலிகள் சாகக் கூடாது"

**கமலாதேவி**

43 வயதானவர் உடைந்த கோவிலைக் காட்டி ஆத்திரத்துடன் கூறுகிறார். "எங்க

> இம்முறை இடம்பெற்ற விமான தாக்குதலில் 98 வீதமான மக்கள் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 95 வீதமான மக்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இத்தாக்குதலால் மக்களுடைய உள்ளம் உடைந்து போனதாக தெரியவிலலை. போராட வேண்டும் என்ற மோறல் தான் மேலோங்கியுள்ளது.
>
> - வல்லை ந. அனந்தராஜ்

ளுக்கு இப்படிச் செய்தால் பறவாயில்லை, சாமி தெய்வங்களுக்கு ஏன் இப்பிடிச் செய்தவங்கள்."

**சுந்தரசிகாமணி**

சீனிக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்த இவர் பிரபல பீடிக் கம்பனியான R.V.G. யின் தகர்ந்த வீட்டைக்காட்டி கூறுகிறார். "இது திட்டமிட்ட செயல். எங்களை அழிக்க வேண்டுமென்றுதான் அரசு இப்படிச் செய்கிறது. வல்வெட்டித்துறை சனநெருக்கம் கூடிய இடம். இங்கு நிலத்தைக் காணுவதே அபூர்

நாங்கள் இதைவிட இன்னும் மோசமான இழப்புக்களைச் சந்திக்கத் தயாராக இருக்க வேணும்."

தொடர்ந்து சுற்றித் திரிந்தோம். இடிந்த வீடுகளுக்குள் பெறுமதியான பொருட்கள் அப்படியே இருக்கின்றன எவரும் தொடவில்லை. கடற்கரையில் வலைகள் குவியல் குவியலாக காணப்பட்டன. ஆம் அவர்கள் அடுத்த நாள் வாழ்வுக்கு தயாராகிறார்கள்.

அவர்கள் பிறந்து வளர்ந்த வீடுகள், பரம்பரை பரம்பரையாக போற்றிப் பாதுகாத்த ஆலயங்கள், எல்லாமே போய்விட்டன. வல்லை மண்ணில் மட்டும் 375க்கு மேற்பட்ட போராளிகள் வீரமரணமடைந்துள்ளார்கள். பொதுமக்களின் இழப்போ கணக்கில்லை. ஆனாலும் அவர்கள் நம்பிக்கையுடன். சந்தியில் நிற்கும் குடும்பத் தலைவர்களின் முகங்களை அவதானிக்கிறேன்.

"இடுக்கண் வருங்கால் நகுக" என்ற குறள் நினைவுக்கு வருகிறது. அவர்களில் ஒருவர் எம்மிடம் வருகிறார். எனது அருகில் நின்ற ஒரு போராளியிடம் கேட்கிறார். "உங்களுக்கு என்ன உதவி வேணும்"; நான் பிரமித்துப் போகிறேன், எமது போராட்டம் வெல்லும் என்ற நம்பிக்கை மேலோங்குகிறது. "அழிவுகளும் அனர்த்தங்களும் அற்புதங்களைச் சாதிக்க வல்லன" என்ற அரவிந்த மகரிஷியின் கூற்றை நினைத்துக் கொள்கிறேன்.

என குறிக்கப்படும் நாள். இந்த சுதந்திரம் 442 வருடங்களின் பின் (1506 - 1948) அந்நியரிடம் இருந்து கிடைக்கப் பெற்றது எனவும் குறிப்பிடப்படுகின்றது. அதே வேளை சுதந்திர தினத்தை கொண்டாடும் முகமாக சிறிலங்கா எங்கும் பெரியளவில் ஏற்பாடாகியுள்ளது.

ஆனால், இலங்கையின் சுதந்திர கால வரலாறும் ஏனைய மூன்றாம் உலக நாடுகளின் வரலாறு போன்றதே. பேச்சளவில் கிடைக்கப் பெற்ற அரசியல் அதிகாரத்தின் மூலம் ஏனைய மூன்றாம் உலக நாடுகளைப் போன்றே இலங்கையும் இறைமையுள்ள தன்னாதிக்கம் உடைய நாடாக இருக்க முடியவில்லை. ஏனெனில் பொருளாதார சுதந்திரம் இன்னமும் இலங்கைக்குக் கிட்டவில்லை.

காலனி ஆதிக்கவாதிகளினால் விட்டுச் செல்லப்பட்ட பொருளாதார அமைப்பு முறை மாறவில்லை. அப் பொருளாதார அமைப்பு முறை இன்னமும் காலனி ஆதிக்கவாதிகளின் தேவை கருதியே செயற்படுகின்றது. அத்தோடு நவீன காலனியாதிக்க முறைகளும் சேர்ந்து கொண்டமையால் இலங்கையின் தன்னாதிக்கம், இறைமை என்பன பெருமளவில் அற்றுப் போய்விட்டன. அந்நிய நாடுகளினதும், நிறுவனங்களினதும் தேவைக்கேற்ப அரசாங்கம் செயற்பட வேண்டியுள்ளது.

இவை ஒருபுறமிருக்க ஐரோப்பியரால் பறிக்கப்பட்ட தமது உரிமைகளைப் பெற இன்னும் இலங்கையின் ஒரு பகுதி மக்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். ஐரோப்பியர் சிங்களவரிடம் தாரைவார்த்துச் சென்ற தமிழர் உரிமை பெறுவதற்காக தமிழர்கள் பல்லாயிரக் கணக்காக உயிர்த்தியாகம் செய்துவிட்டார்கள்.

தமது உரிமையைக் கேட்ட மக்கள் மீது இராணுவ அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. அத்தோடு உரிமைப் போராட்டத்தை அடக்குவதற்கு மனித உரிமைகளுக்கும், சுதந்திரத்திற்கும் விரோதமான சட்ட திட்டங்களும் ஆக்கப்பட்டுள்ளன.

ஆனால், சிறுபான்மையினரை அடக்குவதற்கு ஆக்கப்பட்ட சட்ட திட்டங்களினால் இன்று இலங்கை பூராகவும் உள்ள மக்களும் தமது மனித உரிமைகளைக் கூட இழந்து உள்ளனர்.

அவசரகாலச் சட்டம் வருடக்கணக்காக இலங்கையில் நடைமுறையில் உள்ளது. இதனால் சிங்கள மக்களும் தமது அடிப்படை ஜனநாயக உரிமைகளை இழந்துள்ளார்கள். பேச்சு, எழுத்து, கருத்துச் சுதந்திரம் என்பனவற்றோடு தமது அரசியல் அடிப்படை உரிமைகளையும், ஜனநாயக உரிமைகளையும் அவசரகாலச் சட்டத்தின் மூலம் மக்கள் இழந்துள்ளார்கள்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் 60,000க்கு மேற்பட்ட சிங்கள மக்கள் கொல்லப்பட்டார்கள் / காணமற் போனார்கள். இவ்வாறான சட்டங்கள் முற்று முழுதாக மனிதனின் அடிப்படை உரிமைகளைப் பறித்தன.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகள் இன்று பரவலாக சர்வதேச சமூகத்தின் கண்டனத்தைப் பெற்றுள்ளது. அதாவது 43 வருட கால இலங்கையின் அரசின் ''சுதந்திர வரலாறு'' சுதந்திரமான அரசிற்குள் சுதந்திரமற்ற மக்கள் கூட்டத்தை உருவாக்கியுள்ளது.

அதேவேளை, நாற்பத்தி மூன்று வருடகால சுதந்திர அரசால் ஒவ்வொரு சுதந்திர தினத்தன்றும் மக்களுக்கு வழங்கப்படுவது நூற்றுக்கணக்கான கிரிமினல்களுக்கு விடுதலையும், சலுசலாவில் குறைந்த விலையில் வாளேந்திய சிங்கம் பொறித்த கொடிச் சேலையுமே.

# பாடசாலை மட்டத்தில் வீட்டுத் தோட்டத்திட்டம்

பாடசாலை மட்டத்தில் வீட்டுத்தோட்டத்திட்டத்தை நடைமுறைப்படுத்த யாழ். கல்வித்திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தை இலகுபடுத்துவதற்காக பாடசாலைகளில் விவசாயக் கழகங்களை ஆரம்பிக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு கல்வித்திணைக்களம் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

மாணவர்களை விவசாயத்தில் ஊக்குவிக்கும் பொருட்டு வீட்டுத் தோட்டப் போட்டிகள் நடாத்துமாறும் ஒவ்வொரு மாதமும் பயிர்ச்செய்கையை மதிப்பீடு செய்யுமாறும் இறுதியில் விவசாயக்கண்காட்சி நடாத்தி விளைபொருள்களை சந்தைப்படுத்த உதவுமாறும் விவசாய ஆசிரியர்களை யாழ் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

ளும் இவ்வாறாக இருந்தது.

**வல்வை அனந்தராஜ்**

வல்வைப்படுகொலைகள் நூலை எழுதியவர் இவர். இவர் கூறுகிறார்:

''இம்முறை இடம் பெற்ற விமானத்தாக்குதலில் 98 வீதமான மக்கள் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 95 வீதமான மக்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இத்தாக்குதலால் மக்களுடைய மோறல் உடைந்து போனதாகத் தெரியவில்லை. போராட வேண்டுமென்ற மோறல் தான் மேலோங்கியுள்ளது''

**பஞ்சவர்ணம்**

இவர் ஒரு கடற்றொழிலாளி. நேபாம் குண்டுகளால் எரிக்கப்பட்ட குட்டிராசன் என்பவரது வாடியையும் அதற்குள் எரிந்து கிடந்த எஞ்சின் போன்றவற்றை காட்டி ''தமிழீழமே எரிஞ்சுபோச்சு எங்களுக்கு ஒரு நாடு இல்லையெண்டதால் தானே இந்த நிலை. ஆனபடியால் கஷ்டப்பட்டேனும் நாங்கள் சுதந்திரம் பெறவேணும்''

## செல்லையா கந்தசாமி

யாஸ்ரன் வீதியைச் சேர்ந்தவர் 6வது தலைமுறையைக் கண்ட 92 வயதான இவர் வீட்டின் பெரும் பாகங்கள் இடித்து விழுந்த போதும் குசினியில் அடுப்புக்குக் கீழ் விறகு போடும் இடத்தில் பதுங்கியிருந்து தப்பியவர். இத்தாக்குதலால் செவிப்புலன்சற்றே பாதிக்கப்பட்டிருப்பவர். இவரது கருத்து: ''நான் கட்டின வீடு என்ர கண்ணெதிரே இடிஞ்சு விழுந்தது. பொம்பர் அடிக்கேக்க என்னை ரெண்டு தரம் தூக்கிப் போட்டுது. மூண்டு நாள் வரைக்கும் என்னை ஆரும் பாக்கக் கூடிய நிலைமை இருக்கேல்லை. தொடர்ந்து பொம்பர் அடிச்சதால அதுக்குள்ளயே இருந்திட்டன் வெத்திலையும் விசுக்கோத்தும் சாப்பிட்டுக் கொண்டு.''

**திருமதி புஸ்பகாந்தியம்மா**

குமரப்பாவுடன் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட அன்பழகனின் தாயாரான திருமதி புஸ்பகாந்தியம்மா முத்துக்குமார் கூறுகிறார். ''எனக்கு ஆறு ஆம்பிளைப்பிள்ளையளும் ஆறு பெம்பிளைப் பிள்ளையளும். என்னுடைய பிள்ளைகளுக்கு சொந்தமான வீடுகள் எல்லாமே இடிஞ்சுபோச்சு. நாங்கள் தவண்டு தவண்டெண்டாலும் உயிரைக் கையில பிடிச்சுக் கொண்டு வாழுவம். பெடியள் நாட்டைக் காக்கட்டும்.''

**திருமதி வசந்தகோகிலம் குமரகுரு**

கூரையில்லாத குசினி ஒன்று மட்டுமே தப்பிய வீட்டிற்குள்ளைக் காட்டி ''வீடுகள் தான் உடைந்திருக்கு மோறல் உடையேல்ல''

**சிவகாமிப்பிள்ளை**

விமானக்குண்டு வீச்சினால் தலையில் காயமடைந்த இவர் கூறுகிறார்: ''நான் செத்தாலும் பறவாயில்லை. புலிகள் சாகக் கூடாது''

**கமலாதேவி**

43 வயதானவர் உடைந்த கோவிலைக் காட்டி ஆத்திரத்துடன் கூறுகிறார். ''எங்களுக்கு இப்படிச் செய்தால் பறவாயில்லை, சாமி தெய்வங்களுக்கு ஏன் இப்பிடிச் செய்தவங்கள்.''

**சுந்தரசிகாமணி**

சீனிக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்த இவர் பிரபல பீடிக் கம்பனியான R.V.G. யின் தகர்ந்த வீட்டைக்காட்டிக் கூறுகிறார். ''இது திட்டமிட்ட செயல். எங்களை அழிக்க வேண்டுமென்றுதான் அரசு இப்படிச் செய்கிறது. வல்வெட்டித்துறை சனநெருக்கம் கூடிய இடம். இந்த நிலத்தைக் காணுவதே அபூர்வம். அரசு எதைத்தான் செய்தாலும் நாங்கள் அழியப் போறதில்லை. நாங்கள் வாழுவம்.

**ஏரம்பமூர்த்தி புண்ணியமூர்த்தி**

73 வயதான இவர் குண்டு வீச்சினால் ஏற்பட்ட 7 அடி ஆழமான குழியொன்றினைக் காட்டி இவர் கூறுகிறார்: ''பிரேமதாஸா தனது சவக்குழியை தானே தோண்டுகிறார். போராட்டமெண்டா

அவர்கள் பிறந்து வளர்ந்த வீடுகள், பரம்பரை பரம்பரையாக போற்றிப் பாதுகாத்த ஆலயங்கள், எல்லாமே போய்விட்டன. வல்வை மண்ணில் மட்டும் 375க்கு மேற்பட்ட போராளிகள் வீரமரணமடைந்துள்ளார்கள். பொதுமக்களின் இழப்போ கணக்கில்லை. ஆனாலும் அவர்கள் நம்பிக்கையுடன். சந்தியில் நிற்கும் குழும்பத் தலைவர்களின் முகங்களை அவதானிக்கிறேன்.

''இடுக்கண் வருங்கால் நகுக'' என்ற குறள் நினைவுக்கு வருகிறது. அவர்களில் ஒருவர் எம்மிடம் வருகிறார். எனது அருகில் நின்ற ஒரு போராளியிடம் கேட்கிறார். ''உங்களுக்கு என்ன உதவி வேணும்''. நான் பிரமித்துப் போகிறேன். எமது போராட்டம் வெல்லும் என்ற நம்பிக்கை மேலோங்குகிறது. ''அழிவுகளும் அனர்த்தங்களும் அற்புதங்களைச் சாதிக்க வல்லன'' என்ற அரவிந்த மகரிஷியின் கூற்றை நினைத்துக் கொள்கிறேன்.

பரதன் குழுவினருடன் 'மண்ணெண்ணெய் C90' இல் யாழ் நகரை நோக்கி வந்த நான் செய்தி அறிவதற்காக தொலைக்காட்சியைத் திருகுகிறேன். அதில் முத்துமாரிக்கும், முருகனுக்கும் முழக்கணக்கான உயரத்தில் குண்டுகளை அனுப்பிய சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸா ஏதோ ஒரு விகாரையில் 'பன்சில்' ஒதிக்கொண்டிருக்கிறார்.

- கரும்பறவை

> இம்முறை இடம்பெற்ற விமான தாக்குதலில் 98 வீதமான மக்கள் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 95 வீதமான மக்கள் நேரடியாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இத்தாக்குதலால் மக்களுடைய உள்ளம் உடைந்து போனதாக தெரியவில்லை. போராட வேண்டும் என்ற மோறல் தான் மேலோங்கியுள்ளது.
>
> - வல்வை ந: அனந்தராஜ்

# நெற்திருடரின் பெருந்தன்மை; வைக்கோல் விவசாயிக்கு!

(மாதகல்)

விவசாயி ஒருவர் அறுவடை செய்து வயலில் அடுக்கி வைத்திருந்த நெற்கதிர்களை நள்ளிரவில் சூடுமிதித்து நெல் மணிகளை மட்டும் திருடிக் கொண்டு வைக்கோலை வயலில் அடுக்கி வைத்து விட்டுச் சென்ற சம்பவம் ஒன்று மாதகல் பகுதியில் நடைபெற்றுள்ளது. மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

மாரீசன்கூடலைச் சேர்ந்த சாந்தன் என்பவர் தனது வயலில் விதைத்த நெல்லை அறுவடைசெய்த மறுநாள் சூடு மிதிப்பதற்காக வயலில் விட்டுச்சென்றுள்ளார்.

மறுநாள் காலை வந்து பார்த்தபோது அந்த வைக்கோல் மட்டுமே அடுக்கி வைக்கப்பட்டிருந்ததாம். நள்ளிரவில் வந்த திருடர் கோஷ்டி ஒன்று சூடுமிதித்து நெல்லை எடுத்துக் கொண்டு வைக்கோலை மட்டும் விவசாயிக்கு விட்டுச்சென்றுள்ளது. (ச)

# தி.மு.க. ஆட்சி கவிழ்ப்பிற்கு யாப்பு தவறாகப் பயன்பட்டது

## வி. பி. சிங்

(சென்னை)

இந்திய யாப்பில் 356 ஆவது பிரிவு தவறாகப் பயன்படுத்தப் பட்டு தி. மு. க. அரசு பதவி யிறக்கப்பட்டிருக்கிறது என்று தேசிய முன்னணித் தலைவரும் முன்னாள் பிரதமருமான வி. பி. சிங். சென்னையில் கூறியிருக்கிறார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த வி. பி. சிங் இந்த பதவி நீக்கமானது ஜனநாயகத்தைப் பாதிக்கக் கூடிய செயல் என்றும், இதனால் சஷ்டி ஆட்சி முறையின் ஆணி வேரே பாதிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ்ஸும், அ. இ. அ. திராவிட முன்னேற்றக் கழகமும் அளித்த நிர்ப்பந்தத்தின் பேரில்தான் தமிழக அரசு கலைக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

இதுபோன்ற செயல்கள் தொடராமல் இருக்க யாப்பில் 356 ஆவது பிரிவு மாற்றப் படவேண்டிய தருணம் வந்து விட்டது என்று செய்தியாளர் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் வி. பி. சிங் தெரிவித்தார்.

இச் சந்திப்பின்போது உடனிருந்த கலைஞர் மு. கருணாநிதி தமிழகத்தில் சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்து விட்டன என்று மத்திய அரசு தன்னை எச்சரிக்கவில்லை என்று செய்தியாளர் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போது தெரிவித்தார்.

பேட்டியின்போது தேசிய முன்னணிக் கட்சித் தலைவர்களான என். டி. ராமராவ், பி. உபேந்திரே ஆகியோரும் உடனிருந்தார்கள்.

பிரம நிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழகத்தில் சட்டமும், ஒழுங்கு நிலைகுலையவில்லை என்றும், அ. இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிர்ப்பந்தத்தின் பேரிலேயே தமிழக அரசு கலைக்கப்பட்டது என்றும் கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் இ. எம். எஸ். நம்பூதிரிபாத் நேற்றுச் சென்னையில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

# ராஜீவின் குற்றச்சாட்டிற்கு வி. பி. சிங் மறுப்பு

(பட்னா)

''அமெரிக்கப் போர் விமானங்களுக்கு எரிபொருள் வழங்கும் வசதியை அளிக்காவிட்டிருந்தும் தமது அரசாங்கம் அதனை நிராகரித்திருந்தது'' என்று முன்னாள் இந்தியப் பிரதமர் வி. பி. சிங் கூறியுள்ளார்.

பட்னாவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய வி. பி. சிங் இவ்வாறு குறிப்பிட்டார். இதற்கு முன்னதாக இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராஜீவ் காந்தி வி.பி. அரசாங்கமே அமெரிக்க விமானங்கள் எண்ணெய் நிரப்புவதற்கு இந்தியாவில் அனுமதி வழங்கியது என குற்றம்சாட்டியிருந்தார்.

இதற்குப் பதில் அளிக்கும் முகமாகவே வி. பி. சிங் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பான எல்லா ஆவணங்களையும் மக்கள்முன் வைக்குமாறு சந்திரசேகர் அரசாங்கத்தை அவர் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

# நாடக அரங்கக் கல்லூரியில் இணைந்து நடிக்க சந்தர்ப்பம்

(யாழ்ப்பாணம்)

நாடக அரங்கக் கல்லூரி நடிகர்களுடன் இணைந்து நடிக்க விரும்புபவர்கள் ஆண், பெண் இருபாலாரும் வரும் ஆறாம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்திற்கு வருமபடி மேற்படி கல்லூரியின் நிர்வாகத்தினர் கேட்டுக்கொள்கின்றனர்.

பங்குனிமாத நடுப்பகுதியில் இந்தக் கல்லூரி நாடகம் ஒன்றினை மேடையேற்ற உள்ளது என்றும் இதற்கான பயிற்சிகள் மாசிமாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது என்றும், இந்த நாடகத்தில் பங்குபற்ற விரும்புபவர்களையே நேரில் வருபடியும் கேட்டுக் கொள்கின்றனர்.

வரையறுக்கப்பட்ட தொகையினரே தெரிவு செய்யப்படுவர் எனவே ஆர்வமுள்ளவர்கள் மட்டும் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# அரசியலில் இராணுவ தலையீடு; குலாம் இஷாக்கான் தகவல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் பாகிஸ்தான் இராணுவம் அரசியலில் தலையிடுவதைக் கண்டித்துள்ளார்.

பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் அஸ்லாம் பெக் பாகிஸ்தான் அரசாங்கத்தின் ஈராக் எதிர்ப்புக் கொள்கையினை வன்மையாக விமர்சித்ததைத் தொடர்ந்தே ஜனாதிபதி இஷாக்கான் இராணுவத்தைக் கண்டித்தார்.

ஈராக் மீது அமெரிக்காவும், அதன் சார்பு நாடுகளும் மேற்கொண்டிருக்கும் தாக்குதலை ஆதரித்து சவூதி அரேபியாவுக்கு அனுப்பிவைத்துள்ள பாகிஸ்தான், யுத்தத்தில் நடுநிலைமை வகிக்கப் போவதாக அறிவித்தது.

# பல்.மாணவருக்கு மண்ணெண்ணெய்

மறுமலர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக் கழக மாணவர்களுக்கு (பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களைத் தவிர்ந்த) நாளைய தினம் (செவ்வாய்) ஒவ்வொரு லீற்றர் மண்ணெண்ணெய் விகிதம் வழங்கப்பட வுள்ளதாகவும் எனவே

# கண்டெடுக்கப் பட்டது

ஐயாயிரம் ரூபா பெறுமதியான இலங்கை வங்கி நகை ஒன்று ப. ஜெயராமன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் நேரில் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

# "அரக்கரை ஒழிப்போம்"

முல்லைத்தீவு மாவட்டத்திலும், ஒட்டிசுட்டான் பகுதியிலும் நாற்றுக்கும் அதிகமான இடங்களில் ஆடப்பட்ட "அரக்கரை ஒழிப்போம்" என்ற தெருக்கூத்து பலரின் பாராட்டைப் பெற்றுள்ளது.

பாரம்பரிய தெருக்கூத்து

# 17 ஆம் நாள் போர்

## மீண்டும் இஸ்ரேல்மீது ஸ்கட்

★ இஸ்ரேல் மீது ஒன்பதாவது தடவையாக நேற்றுமுன்தினமும், நேற்றுக் காலையும் ஈராக் 'ஸ்கட்' ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டது வீசப்பட்ட இரண்டு ஏவுகணைகள் அமெரிக்க பெற்றியட்டால் எதிர்க்கப்படவில்லை என்றும், இவை மேற்குக்கரைப் பிரதேசங்களில் சென்று வீழ்ந்ததாகவும் இஸ்ரேல் அறிவித்துள்ளது. இதனால் எவருக்கும் காயமோ, கட்டடங்களுக்கு சேதமோ ஏற்படவில்லை எனவும் இஸ்ரேல் அறிவித்தது.

★ சவூதி அரேபியாவின் தலைநகர் றியாட்டிலும், டகரானிலும் நேற்று ஸ்கட் ஏவுகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனை எதிர்த்துச்சென்ற பெற்றியாட்டும் இதனோடு சேர்ந்து தரையில் விழுந்ததாகச் சவூதி அரேபியா அறிவித்தது; இந்தத் தாக்குதலின்போது 29 பேர் காயமுற்றனர்.

★ ஈராக்மீது மீண்டும் மீண்டும் தாம் விமானத் தாக்குதலை மேற்கொள்வதாகக் கூட்டுப்படையினர் அறிவித்துள்ளனர். நேற்று முன்தினம் தாம் குவைத்தில் உள்ள ஈராக்கிய எல்லைக் காவல் நிலையங்கள் மீது பி 52 குண்டுவீச்சு விமானங்களால் தொடர்ந்து தாக்கியதாகவும், ஸ்கட் ஏவுகணைத்தளம் ஒன்றும் அழிக்கப்பட்டது என்று அறிவித்துள்ளது.

★ ஈராக் ஆகாயக் கட்டுப்பாட்டை இழந்து விட்டதால் இனி அவர்களால் விமானத்தாக்குதல் நடத்தமுடியாது என்று பிரித்தானிய விமானத்துறை அதிகாரி தெரிவித்தார்.

★ கூட்டுப்படைகள் மக்கள் வாழும் குடியிருப்புக்கள்மீதும், சமய வழிபாட்டுத் தலங்கள் மீதும், விமானத் தாக்குதல் நடத்தியிருப்பதாக ஈராக் குற்றஞ்சாட்டியுள்ளது. சனிக்கிழமை இரவு முழுவதும் தொடர்ச்சியாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக ஈராக் தெரிவித்துள்ளது.

★ ஈராக்கில் இருந்து பெருமளவு மக்கள் அகதிகளாக ஈரானுக்குள் வருவதாக இர்னா செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது. இதுவரை 3500 மக்கள் வந்துள்ளனர் என்றும், 1600 பேர் இப்பொழுது வந்துகொண்டிருக்கிறார்கள் என்றும், அவர்களுக்கான இட வசதிகள் செய்யப்படுகின்றதென்றும், சுமார் ஒரு இலட்சம் அகதிகளைத் தாம் எதிர்பார்ப்பதாகவும், ஈரானிய அகதிகள் புனர்வாழ்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

★ வளைகுடாப் போர் முனையில் செய்திகளைச் சேகரிப்பதில் தமக்குச் சிக்கல்கள் ஏற்படுவதாகப் பத்திரிகையாளர்கள் குற்றஞ்சாட்டி இருக்கிறார்கள்.

★ ஈரானின் உயர் தேசிய பாதுகாப்புச் சபை அமைதித் தீர்விற்கான புதிய முயற்சிகளைப் பற்றிப் பரிசிலித்து வருகிறது. அந்நியர் தலையீடு இல்லாத நிலையான பாதுகாப்பு அமைப்பு ஒன்று வளைகுடாப் பகுதிக்குத் தேவையென்று ஈரான் கருதுவதாகப் பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது. டெஹிரானில் அல்ஜீரியா, ஈராக், யேமன் ஆகியவற்றின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து ஈரானின் உயர் தேசிய பாதுகாப்புச் சபை நடந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

★ ஜோர்டான் சென்ற ஈராக்கிய துணைப்பிரதமர் ஈரானிய ஜனாதிபதியின் செய்தி ஒன்றை ஈராக்கிய ஜனாதிபதிக்கு எடுத்துக்கொண்டு பாக்தாத் திரும்பியுள்ளார்.

★ ஈராக்கிய படைகள் மீது கடும் தாக்குதல்கள் நடத்தியும் ஈராக் குவைத்தை விட்டு வெளியேறும் அறிகுறிகள் தெரியவில்லை என்று பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

★ பாக்தாத்தில் தங்கியிருக்கும் மேற்கு நாட்டுச்செய்தியாளர்கள் மக்கள் குடியிருப்புக்கள் மீது கூட்டுப்படைகள் விமானத் தாக்குதல் நடத்துவதாகத் தெரிவித்துள்ளனர்.

★ சவூதி அரேபியாவிலுள்ள கூட்டுப்படைகளின் ஐம்பது வாகனங்கள் காணாமற் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★ குவைத்திலுள்ள ஈராக்கிய நிலைகள்மீது பி-52 குண்டுவீச்சு விமானங்கள் உட்பட நூற்றுக்கணக்கான கூட்டுப்படை விமானங்கள் நேற்றும் தொடர்ந்து தாக்கியுள்ளன.

★ சிரியாவில் கைது செய்யப்பட்ட ஏழு அமெரிக்க விமானிகளையும் சிரியா அமெரிக்காவிடம் ஒப்படைத்தமையினை ஈராக் கண்டனம் செய்துள்ளது இதை சிரியா மறுத்துள்ளது.

★ பெருவின் தலைநகரான லீமாவில் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் தூதரகங்களின் முன்னால் பலத்த குண்டுவெடிப்புகள் இடம்பெற்றுள்ளன.

★ கூட்டுப்படைகளின் 38 விமானங்களுக்கு எரிபொருள்

இதுப்பாணம் செயலகம் தொடராமல் இருக்க யாப்பில் 356 ஆவது பிரிவு மாற்றப்படவேண்டிய தருணம் வந்து

...அரசாங்கங்களுக்கு எரிபொருள் வழங்கும் வசதியை அமெரிக்கா வேட்டிருந்தும் தமது அரசாங்கம்

பிரதமர் வி. பி. சிங் கூறியுள்ளார்.

பட்னாவில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய வி. பி. சிங் இவ்வாறு குறிப்பிட்டார். இதற்கு முன்னதாக இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் ராஜீவ்காந்தி வி.பி. அரசாங்கமே அமெரிக்க விமானங்கள் எண்ணெய் நிரப்புவதற்கு இந்தியாவில் அனுமதி வழங்கியது என குற்றம்சாட்டியிருந்தார்.

இதற்குப் பதில் அளிக்கும் முகமாகவே வி. பி. சிங் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பான எல்லா ஆவணங்களையும் மக்கள்முன் வைக்குமாறு சந்திரசேகர் அரசாங்கத்தை அவர் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

...நடைபெற்றதாக ஈராக் குற்றஞ்சாட்டியுள்ளது. சனிக்கிழமை இரவு முழுவதும் தொடர்ச்சியாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக ஈராக் தெரிவித்துள்ளது.

★ ஈராக்கில் இருந்து பெருமளவு மக்கள் அகதிகளாக ஈரானுக்குள் வருவதாக ஈரானா செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது. இதுவரை 3500 மக்கள் வந்துள்ளனர் என்றும், 1600 பேர் இப்பொழுது வந்துகொண்டிருக்கிறார்கள் என்றும், அவர்களுக்கான இடவசதிகள் செய்யப்படுகின்றதென்றும், சுமார் ஒரு இலட்சம் அகதிகளைத் தாம் எதிர்பார்ப்பதாகவும், ஈரானிய அகதிகள் புனர்வாழ்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

★ வளைகுடாப் போர் முனையில் செய்திகளைச் சேகரிப்பதில் தமக்குக் கஷ்டங்கள் ஏற்படுவதாகப் பத்திரிகையாளர்கள் குற்றஞ்சாட்டி இருக்கிறார்கள்.

★ ஈரானின் உயர் தேசிய பாதுகாப்புச் சபை அமைதித் தீர்விற்கான புதிய முயற்சிகளைப் பற்றிப் பரிசீலித்து வருகிறது. அந்நியர் தலையீடு இல்லாத நிலையான பாதுகாப்பு அமைப்பு ஒன்று வளைகுடாப் பகுதிக்குத் தேவையென்று ஈரான் கருதுவதாகப் பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது. டெஹ்ரானில் அல்ஜீரியா, ஈராக், யேமன் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து ஈரானின் உயர் தேசிய பாதுகாப்புச் சபை நடந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

★ ஜோர்டான் சென்ற ஈராக்கிய துணைப்பிரதமர் ஈரானிய ஜனாதிபதியின் செய்தி ஒன்றை ஈராக்கிய ஜனாதிபதிக்கு எடுத்துக்கொண்டு பாக்தாத் திரும்பியுள்ளார்.

★ ஈராக்கிய படைகள் மீது கடும் தாக்குதல்கள் நடத்தியும் ஈராக் குவைத்தை விட்டு வெளியேறும் அறிகுறிகள் தெரியவில்லை என்று பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

# நாடக அரங்கக் கல்லூரியில் இணைந்து நடிக்க சந்தர்ப்பம்

(யாழ்ப்பாணம்)

நாடக அரங்கக் கல்லூரி நடிகர்களுடன் இணைந்து நடிக்க விரும்புபவர்கள் ஆண், பெண் இருபாலாரும் வரும் ஆறாம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்திற்கு வரும்படி மேற்படி கல்லூரியின் நிர்வாகத்தினர் கேட்டுக்கொள்கின்றனர்.

பங்குனி மாத நடுப்பகுதியில் இந்தக் கல்லூரி நாடகம் ஒன்றினை மேடையேற்ற உள்ளது என்றும் இதற்கான பயிற்சிகள் மாசி மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது என்றும், இந்த நாடகத்தில் பங்குபற்ற விரும்புபவர்களையே நேரில் வருமாறும் கேட்டுக் கொள்கின்றனர்.

வரையறுக்கப்பட்ட தொகையினரே தெரிவு செய்யப்படுவர் என்பதனால் ஆர்வமுள்ளவர்கள் மட்டும் வரும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# அரசியலில் இராணுவ தலையீடு; குலாம் இஷாக்கான் தகவல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் ஜனாதிபதி குலாம் இஷாக்கான் பாகிஸ்தான் இராணுவம் அரசியலில் தலையிடுவதைக் கண்டித்துள்ளார்.

பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் அஸ்லாம் பெக் பாகிஸ்தான் அரசாங்கத்தின் ஈராக் எதிர்ப்புக் கொள்கையினை வன்மையாக விமர்சித்ததைத் தொடர்ந்தே ஜனாதிபதி இஷாக்கான் இராணுவத்தைக் கண்டித்தார்.

ஈராக் மீது அமெரிக்காவும், அதன் சார்பு நாடுகளும் மேற்கொண்டிருக்கும் தாக்குதலை முஸ்லிம்களுக்கு எதிரான சியோனிச சதி என்று கடந்த திங்களன்று ஜெனரல் அஸ்லாம் பெக் கூறியிருந்தார். இவரின் பேச்சைத் தொடர்ந்து 11,000 இராணுவத்தினரை வளைகுடாவுக்கு அனுப்பி வைத்துள்ள பாகிஸ்தான், யுத்தத்தில் நடுநிலைமை வகிக்கப் போவதாக அறிவித்தது.

## பல்.மாணவருக்கு மண்எண்ணெய்

மறுமலர்ச்சிக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ். பல்கலைக் கழக மாணவர்களுக்கு (பல்கலைக்கழக விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்களைத் தவிர்த்து) நாளைய தினம் (செவ்வாய்) ஒவ்வொரு லீற்றர் மண்ணெண்ணெய் விகிதம் வழங்கப்படவுள்ளதாகவும், எனவே மாணவர்கள் அனைவரையும் பல்கலைக்கழக அடையாள அட்டையுடன் வருகை தருமாறும் மறுமலர்ச்சிக்கழக வட்டாரங்கள் கேட்டுக் கொள்கின்றன.

## கண்டெடுக்கப் பட்டது

ஐயாயிரம் ரூபா பெறுமதியான இலங்கை வங்கி றசீது ஒன்று ப. ஜெயராமன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர்கள் நேரில் வந்து ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

## "அரக்கரை ஒழிப்போம்"

முல்லைத்தீவு மாவட்டத்திலும், ஒட்டிசுட்டான் பகுதியிலும் நூற்றுக்கும் அதிகமான தடவைகள் ஆடப்பட்ட "அரக்கரை ஒழிப்போம்" என்ற தெருக்கூத்து பலரின் பாராட்டைப் பெற்றுள்ளது.

பாரம்பரிய தெருக்கூத்து வடிவமைப்பைக் கொண்ட இந்தக் கூத்து சமகாலப் போராட்ட நிகழ்வுகளை உள்ளடக்கியது எஸ்.எஸ். இந்தக் கூத்து வடிவத்துக்கு உள்ளடக்கத்தை வழங்கியுள்ளார்.

## இளம்பெண்

வீடொன்றில் 28 வயதான இளம் பெண்ணொருவர் தனிமையில் இருந்த சமயம் அத்துமீறிப் புகுந்த நால்வர் அப் பெண்ணைத் தாக்கி காயப்படுத்தியுள்ளனர்.

## சிறிலங்கா

...ணுவத்தினரால் விற்பனை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ளவர்களிடம் இதனை விலை கொடுத்து வாங்கிச் செல்ல வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சுதந்திரதின நிகழ்ச்சிகளை முன்னிட்டு, இராணுவம் வவுனியா நகரப் பகுதியில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக அறியப்படுகிறது (தி)

# சதாமை அமெரிக்கா குறைத்து மதித்துவிட்டது

"ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைனை அமெரிக்கா குறைத்து மதிப்பிட்டுவிட்டது" என்று சோவியத் யூனியனின் சிரேஷ்ட இராணுவ அதிகாரியான லெப்டினன்ட் ஜெனரல் ஸ்டாரோடுபோவ் தெரிவித்துள்ளார்.

"சோவியத் கிளாஸ் கொஸ்ட்" பத்திரிகைக்குப் பேட்டியளித்த அவர், அமெரிக்காவினதும், கூட்டுப்படைகளினதும் முதலாவது குண்டுவீச்சுகளிலேயே சதாம் ஹுசைன் பணிந்துவிடுவார் அல்லது சில வகை வீரதீரச் செயல்களில் குதித்துவிடுவார் என அமெரிக்கா நினைத்திருக்கும்.

ஆனால் பாலைவனத்தில் 8 ஆண்டுகளாகப் போரில் ஈடுபட்டிருக்கும் ஒருவர் குறித்து அவ்வாறு எதிர்பார்க்க முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் போரின் ஆரம்ப நாட்களில் பலத்த அடியைக் கொடுக்க நேரடிப் பெரும் பாலும் தவறிவிட்டன என்பதை சோவியத் யூனியனும் உள்ள தகவல்கள் எடுத்துக்காட்டுவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

## வாக்குறுதியை

103 பொலிஸார் சேர்ட்டையில் முடங்கியிருந்தனர் என்றும் தாம் மீட்கப்படும்போது 93 பொலிஸார் தான் இருந்தனர் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

★ பாக்தாத்தில் தங்கியிருக்கும் மேற்கு நாட்டுச்செய்தியாளர்கள் மக்கள் குடியிருப்புக்கள் மீது கூட்டுப்படைகள் விமானத் தாக்குதல் நடத்துவதாகத் தெரிவித்துள்ளனர்.

★ சவூதி அரேபியாவிலுள்ள கூட்டுப்படைகளின் ஐம்பது வாகனங்கள் காணாமற் போயுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

★ குவைத்திலுள்ள ஈராக்கிய நிலைகள்மீது பி-52 குண்டுவீச்சு விமானங்கள் உட்பட நூற்றுக்கணக்கான கூட்டுப்படை விமானங்கள் நேற்றும் தொடர்ந்து தாக்கியுள்ளன.

★ சிரியாவில் கைது செய்யப்பட்ட ஏழு அமெரிக்க விமானிகளையும் சிரியா அமெரிக்காவிடம் ஒப்படைத்தமையினை ஈராக் கண்டனம் செய்துள்ளது. இதை சிரியா மறுத்துள்ளது.

★ பெருவின் தலைநகரான லீமாவில் அமெரிக்க மற்றும் பிரிட்டிஷ் தூதரகங்களின் முன்னால் பாரிய குண்டுவெடிப்புகள் இடம்பெற்றுள்ளன.

★ கூட்டுப்படைகளின் 38 விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பியதன்மூலம் இந்தியா நடுநிலைக் கொள்கையிலிருந்து விலகிவிட்டதாக ஈராக் கூறியுள்ளது

★ ஈராக்கிற்காகப் போரிட அணிதிரண்டுள்ள பாகிஸ்தான் தொண்டர்களைத் தனது எல்லைக்குள் அனுமதிக்கப்போவதில்லை என ஈரான் அறிவித்துள்ளது.

★ குவைத்தை மீட்டவுடன் வெளிநாட்டுப் படைகள் உடனடியாக வளைகுடாவில் இருந்து வெளியேறிவிட வேண்டும் என எகிப்திய வெளிவிவகார அமைச்சர் ரோமில் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### திருமதி குமார் சிவக்கொழுந்து

பன்னாலை, சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலியைச் சேர்ந்த திருமதி குமார் சிவக்கொழுந்து 02-02-1991 சனிக்கிழமை அதிகாலை காலமானார். இவர் சடையர் பார்பதியின் சிரேஷ்ட புத்திரியும், பவானந்தன், வேதீசன் ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்லத்துரை (வாகனத் தரகர், பரந்தன்), சந்திரசேகரன், குலசேகரம், புவனேஸ்வரி, அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரியும், ராணி (பரந்தன்), அழகம்மா தருமு, தேவபாலன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 02.02.1991 சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் குடும்ப மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

பன்னாலை,
சிறுப்பிட்டி.
நீர்வேலி.

தகவல்:
சு. குலசேகரம்

(R. 1082)

[illegible]